<u>சுருக்கம்</u>

தொடக்கக் கல்வி- அனைவருக்கும் கல்வி இயக்கம் - கருத்தாய்வு மையங்களில் நடைபெறும் பயிற்சி நாட்களை பணி நாட்களாக அனுமதித்தல் - ஆணை வெளியிடப்படுகிறது

பள்ளிக் கல்வித்(சி2) துறை

**அரசாணை(நிலை)** **எண்** : 29

நாள் 12.02.2008

<u>படிக்கப்பட்டவை:-</u>

1. அரசாணை (1டி) எண் 58 பள்ளிக் கல்வி, நாள் 22.4.2003
2. தொடக்கக் கல்வி இயக்குநரின் கடித ந.க.எண் 29198/கே3/2007 நாள் 18.9.2007
3. பள்ளிக் கல்வி இயக்குநரின் கடித ந.க.எண் 112059/சி4 - சி2/2007 நாள் 15.12.2007.
4. அனைவருக்கும் கல்வி இயக்கக மாநில திட்ட இயக்குநரின் கடித ந.க.எண் 4144/அ1/அகஇ/2007 நாள் 18.12.2007

******

<u>**ஆணை**</u>

அனைவருக்கும் கல்வி இயக்கம் என்னும் மைய அரசின் திட்டத்தின் கீழ் ஆசிரியர்களுக்கு ஆற்றல் மேம்பாட்டு பயிற்சி அளிப்பதற்காக பள்ளித் தொகுப்பு கருத்தாய்வு மையங்கள் (Cluster Resource Centres (CRC)) செயல்பட்டு வருகின்றன. தொடக்கப்பள்ளிகளில் 1-5 வகுப்பு ஆசிரியர்களுக்கு செயல்வழிக் கற்றல் பயிற்சி (Activity Based Learning (ABL)) மற்றும் 6-8 வகுப்பு ஆசிரியர்களுக்கு படைப்பாற்றல் கல்வி பயிற்சி ( Active Learning Method (ALM)) ஆகியவை ஆசிரியர்களுக்கு வகுப்பறைகளில் ஏற்படுகின்ற ஐயப்பாடுகளைக் களைகிற வகையில், சம்பந்தப்பட்ட பாடத்தில் திறன் படைத்துள்ள தலைமை ஆசிரியர்/ ஆசிரியர் / ஆசிரியர் பயிற்றுநர்கள் மூலமாக தனித்தனியாக நடத்தப்படுவதாகவும் மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் தொடக்கக் கல்வி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

2. மேற்கண்ட பயிற்சிகள் மாதம் ஒரு நாள் வீதம் ஆண்டுக்கு 10 நாட்களுக்கு குறையாமல் நடைபெறுவதாகவும், 2005-2006ம் ஆண்டுவரை பயிற்சி நாட்கள் 1/2 நாள் வீதம் பணி நாளாக கணக்கில் கொள்ளப்பட்டு 10 பயிற்சி நாட்களுக்கு 5 வேலை நாட்கள் என்று கணக்கிடப்பட்டு வந்ததாகவும், 2006-2007ம் ஆண்டு முதல் காலை முதல் மாலை வரை பயிற்சி நடைபெற்று வருவதால் இப்பயிற்சி நாட்களை முழு வேலை நாட்களாக கணக்கிட்டு அனுமதிக்கலாம் எனவும் தொடக்கக் கல்வி இயக்குநர் தெரிவித்துள்ளார். மேலும், அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் கீழ் நடைபெறுகின்ற குறுவள மைய பயிற்சி கூட்டங்கள் விடுமுறை நாட்களில் குறிப்பாக மூன்றாவது சனிக்கிழமைகளில் மட்டுமே நடைபெற்று வருவதாகவும், இதனால் மாணவ/ மாணவியருக்கான பாடத் திட்டங்கள் கற்பித்தல் பணிக்கு எவ்வித குந்தகமும் ஏற்படுவதில்லை எனவும், ஆசிரியர்களுக்கென நிர்ணயிக்கப்பட்ட மொத்தம் 220 பணிநாட்களுக்குள் இந்த 10 பயிற்சி நாட்களும் அடங்கும் என்பதாலும் கருத்தாய்வு மையங்களில் ஆசிரியர்களுக்கு ஒரு கல்வியாண்டில் ஏப்ரல் மற்றும் மே மாதங்கள் தவிர்த்து அளிக்கப்படும் 10 பயிற்சி நாட்களை 10 வேலை நாட்களாகக் கருத

அரசின் அனுமதி வழங்குமாறும், இவ்வாறு அனுமதிக்கப் படுவதால் பள்ளிகளின் மொத்த வேலை நாட்கள் 220 என்பதில் மாற்றம் ஏதும் இல்லை என்றும் தொடக்கக் கல்வி இயக்குநர் தெரிவித்துள்ளார். தொடக்கக் கல்வி இயக்குநரின் கருத்துருவை ஏற்கலாம் என அனைவருக்கும் கல்வி இயக்கக மாநில திட்ட இயக்குநரும் பள்ளிக் கல்வி இயக்குநரும் பரிந்துரை செய்துள்ளனர்.

3. மேலே பத்தி இரண்டில் உள்ள தொடக்கக் கல்வி இயக்குநரின் கருத்துருவை கவனமுடன் பரிசீலித்து, அதனை ஏற்று, அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் கீழ் பள்ளித் தொகுப்பு கருத்தாய்வு மையங்களில் (Cluster Resource Centres (CRC)) செயல்வழிக் கற்றல் பயிற்சி (Activity Based Learning (ABL)) பெறும் தொடக்கப் பள்ளிகளில் உள்ள 1-5 வகுப்பு ஆசிரியர்கள் மற்றும் படைப்பாற்றல் கல்வி பயிற்சி (Active Learning Method (ALM)) பெறும் 6-8 வகுப்பு ஆசிரியர்கள் ஆகியோருக்கு அவர்கள் ஒரு ஆண்டில் பயிற்சி பெறும் 10 நாட்களையும் 10 பணி நாட்களாகக் கருதலாம் என்றும், அந்த 10 நாட்களை பள்ளி செயல்பட நிர்ணயிக்கப்பட்டுள்ள 220 பணிநாட்களுக்குள் அடங்கும் வகையில் அனுமதிக்கலாம் எனவும் அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ம. குற்றாலிங்கம்

அரசு செயலாளர்.

பெறுநர்
தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை-6
மாநில திட்ட இயக்குநர்,
அனைவருக்கும் கல்வி இயக்கம், சென்னை-6
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை-6.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.